# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 60/2023 | **CNR No.** | : | TNKI13-000075-2023 |
| **Name** | : | குமரேசன் | **Father's Name** | : | பொன்னுசாமி ( எ) அண்ணாமலை |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 75 | **Village** | : | மண்ணாண்டியூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12.00 PM | **End Time** | : | 12:10 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) இந்த வழக்கை எனக்கு ஜுவணம்சம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள் மற்றும் 1 மகள் ஆவார். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆமாம். அனைவருக்கும் நான் தான் திருமணம் செய்து வைத்தேனா என்றால் ஆமாம். நானும் பிரதிவாதியும் விவசாயம் செய்து தான் ஜுவணம் செய்து வருகிறோமா என்றால் ஆமாம்.

(2) **வா.சா.ஆ.2** ஆவணமானது நாங்கள் விவசயாம் செய்து பெற்ற சொத்தை 2ம் பிரதிவாதி பெயரில் கிரையம் செய்து கொடுத்துள்ளோமா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறாரா என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி அரசாங்கத்தில் வேலையில் உள்ளாரா என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த நிலத்தில் தான் பயிர் செய்து

வருகிறோமா என்றால் ஆமாம். அதில் என்ன பயிர் செய்துள்ளேன் என்றால் 340 தென்னை மரங்கள் உள்ளன. தேங்காய் தோப்பில் இருந்து விற்பனை செய்யும் பணத்தை யார் வாங்குகிறார் என்றால் நான் வாங்கி வந்தேன், தற்போது இல்லை. வழக்கு சொத்து 2ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்று அவர் தான் ஜீவனம்சம் தர கடமைப்பட்டவர் என்று 1ம் பிரதிவாதி ஜீவனம்சம் தர கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் 1ம் பிரதிவாதி ஜீவனம்சம் தர தயாராக உள்ளார்.

(3) **2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai